# தமிழ்நாடு தட்டச்சு - கணினி பள்ளிகள் சங்கம்
# TAMILNADU TYPEWRITING - COMPUTER INSTITUTES' ASSOCIATION
(Regd. No : 43/2016)

Regd. Office : # 555/18, Gandhi Road, (Ist Floor), Kanchipuram - 631 501.
Communication Address : #M.61. TNHB Qtrs,Complex, Kanchipuram - 631502
web : www.tntcia.com

L. SENTHIL, B.C.A.,D.C.P.,T.T.C.,
State President,
CELL : 9443082572

J. BARATHAMANI, T.T.C.,
State General Secretary,
CELL : 9003489826

L. MANOHARAN, T.T.C.,
State Treasurer,
CELL : 9442883275

V. KALAIVANAN, B.COM, M.A, PGDCA.,
Vice Presedent

A.M. SATHYAN
Vice President

M. DURAIPANDI, B.A, T.T.C.,
Joint Secretary

V. CHANDIRASEKARAN, M.A, M.COM, B.ED.,
Joint Secretary

M. KARTHIKEYAN, M.COM, M.PHIL, M.A, D.L.L, A.L.,
Founder Adviser

D.A. DHARMARAJ, B.A.,
Honorary President


08.08.2020

## விடியலை நோக்கி .....

அன்புடையீர். வணக்கம்.

கடந்த 4 மாதங்களாக நாம் அனைவரும் மிகுந்த துயரங்களை அனுபவித்துக் கொண்டிருப்பது அறிந்ததே. ஆரம்பக் கட்டத்தில் அரசு அறிவித்துள்ள ஊரடங்கினை நாம் அனைவரும் முழுமையாக பின்பற்றி வந்தோம். பின்னர் படிப்படியாக அரசால் தளர்வுகள் அறிவிக்கப்பட்டு வணிக நிறுவனங்கள் மற்றும் பிற தொழில்சாலைகள் இயங்க ஆரம்பித்தன. மக்களும் தங்களின் அன்றாட பணிகளை துவங்க ஆரம்பித்தார்கள். பள்ளி, கல்லூரிகளைத் தவிர பிற அத்தியாவசியப் பணிகள் அனைத்தும் துவங்க ஆரம்பித்தன.

மார்ச் 18 முதல் ஆரம்பித்து ஏப்ரல், மே, ஜுன், ஜுலை ஆகிய மாதங்கள் கடந்தன. நம்மில் 80 சதவிகிதத்திற்கும் மேலானவர்கள் தங்களது பயிலக இடத்திற்கான வாடகை கொடுக்க முடியாமலும், குடும்பம் நடத்துவதற்கே மிகவும் சிரமப்படும் நிலைக்கும் தள்ளப்பட்டனர். பின்னர்தான் நமது சங்கத்தின் மூலம் 08.05.2020 அன்று தேர்வு வாரியத்திற்கு பயிலகம் மீண்டும் திறந்திட அனுமதி வேண்டி மனு அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 19.05.2020 அன்று **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், உயர்கல்வித்துறை செயலர்** அவர்களுக்கும் மனு அளிக்கப்பட்டது. பின்னர் 22.05.2020 பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் **மாண்புமிகு கே.ஏ. செங்கோட்டையன்** அவர்களிடமும் மனு கொடுக்கப்பட்டது. அதன்பிறகு **மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் கே.பி.அன்பழகன்** அவர்களை 23.05.2020 அன்று அவரது இல்லத்திற்கே நேரில் சென்று (தருமபுரி மாவட்டம், காரிமங்கலம்) நமது குறைகளை விளக்கிக் கூறி மனு அளிக்கப்பட்டது.

..2..

மேலும் கூடுதல் முயற்சியாக தமிழகத்தில் அனைத்து **மாவட்ட ஆட்சித் தலைவர்** அவர்களிடமும் கடந்த 26.05.2020 அன்று நமது சங்கப் பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்கள் மூலமாக பயிலகம் திறந்திட பரிந்துரைக்க வேண்டி மனு கொடுக்கப்பட்டது. இவ்வாறாக தமிழகத்தில் உள்ள அனைத்து தட்டச்சுப் பயிலக நலன் கருதி அனைத்து விதத்திலும் விடா முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இவை அனைத்திற்கும் எந்தவித பலனும் கிடைக்கவில்லை.

நம்மால் முடிந்த அளவு முயற்சி செய்தும் பலன் கிட்டவில்லையே.. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களது செவிகளுக்கு நமது குறைகள் செல்லவில்லையே.. நமது தாய்வீடான தேர்வு வாரியமும் நம்மைக் கண்டுகொள்ளவில்லையே.. என மனம் வெதும்பி வேதனை அடையும் நிலையும் ஏற்பட்டது. இதன் பின்னர்தான் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்து நீதிமன்றத்தின் கதவைத் தட்டும் நிலை ஏற்பட்டது. நாம் எந்த முயற்சியும் எடுக்காமல் உடனடியாக நீதிமன்றம் செல்லவில்லை என்பதை இந்த சமயத்தில் சுட்டிக் காட்டிட விரும்புகின்றோம்.

பின்னர் அந்த வழக்கில் நீதியரசர்கள் பிறவற்றை உதாரணம் காட்டி இவைகள் எல்லாம் இயங்கும்போது ஏன் தட்டச்சுப் பயிலகம் திறக்க அனுமதி அளிக்கவில்லை என அரசுக்கு விளக்கம் கேட்டு கால அவகாசம் கொடுத்தார்கள். இருப்பினும் வழக்கு மேலும் தொய்வின்றி செல்வதற்காகவும் வழக்கிற்கு கூடுதல் வலு சேர்ப்பதற்காகவும், விரைவில் நம் அனைவருக்கும் நல்லதொரு விடிவுகாலம் பிறக்கட்டும் என்ற ஒரே காரணத்திற்காக மூத்த வழக்கறிஞர் **திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களை** நியமித்து நமது சங்கம் வழக்கு போட்டு அந்த வழக்கும் நேற்றைய தினம் 07.08.2020 சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் விசாரணைக்கு வந்தது. அப்போது மூத்த வழக்கறிஞர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஆஜராகி **"தட்டச்சு பயிற்சி பெற்றவர்களின் தேவை அதிகரித்துக் கொண்டே போகிறது. டாஸ்மாக் கடைகளே திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஓட்டல்களும் ஜிம்களும் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே அரசுத் தரப்பு வாதம் ஏற்புடையதாக இல்லை என மிக அருமையாக நம் அனைவரின் விடிவுகாலத்திற்காக வாதாடினார்.** பின்னர் ஏற்கனவே போடப்பட்ட வழக்கு மற்றும் தற்போது மூத்த வழக்கறிஞர் வைத்து தொடுத்த வழக்கு ஆக இரண்டும் வர இருக்கின்ற 17ம் தேதிக்கு விசாரணைக்கு வர இருப்பதாக அறிகிறோம். நிச்சயம் நமது விடியலுக்காக நமது வழக்கறிஞர்கள் நமது நிலைகளை எடுத்துக் கூறி வாதாடி நமக்கெல்லாம் நல்லதொரு முடிவினை பெற்றுத் தருவார்கள் என நம்புகிறோம்.

எனவே அன்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தயவுகூர்ந்து வேறு எந்த சிந்தனைக்கும் இடமளிக்காமலும் மற்ற பிற பகுதிகளில் வரும் தேவையற்ற வதந்திகளை சற்றேனும் செவிகொள்ளாமலும் இருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். நமது அனைவரின் நலனுக்காகவே நமது அனைத்து முயற்சிகளும் நடந்து வருகின்றது என்பதைத் தாங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள். இவ்வளவு நாட்கள் மாபெரும் துயரங்களைச் சந்தித்து விட்டோம். இனி கடக்கப் போகும் நாட்கள் வெகு சிலவே. எனவே தயவுசெய்து அமைதிக்காத்திடவும். நம் அனைவருக்கும் மிக விரைவில் நல்லதொரு விடிவுகாலம் பிறக்கும் என நம்புவோம்.

மேலே கூறிய அனைத்து நிகழ்வுகளும் முயற்சிகளேத் தவிர முடிவுகள் நம் கையில் இல்லை. அதற்காக முயற்சி செய்யாமல் இருந்துவிட முடியாது. இதையும் தவறாக ஒருசிலர் விமர்சிப்பதையும் கவனத்தில் கொள்ளாது நம் அனைவரின் நலனுக்காகவே இந்த முயற்சிகள் எடுக்கப்படுகிறது என்ற தூய எண்ணத்தோடு செயல்பட்டு வருகின்றோம்.

உங்கள் அனைவர் மனதிலும் தோன்றும் எண்ணங்களுக்கும், ஆலோசனைகளுக்கும், கேள்விப்படும் விசயங்களுக்கும் (தவறான விஷயங்களாக இருந்தால் கூட) செவிசாய்க்கவும், பதில் அளிக்கவும் நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி. வணக்கம்.

இப்படிக்கு,
அன்புள்ள,

(எல். செந்தில்)
மாநிலத்தலைவர்.